RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s25

OPEN ACCESS



# ஆழ்வார்கள் பாசுரங்களில் ஆளுமைச் சிந்தனைகள்

**ந.செ.கி. சங்கீத்ராதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை- 625009, தமிழ்நாடு, இந்தியா.

# Personality Thoughts in Alvars Poems

**N.S.K. Sangeethratha** [a, *]

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author: Sangeethbala7375@gmail.com

Received: 03-04-2021
Revised: 05-11-2021
Accepted: 12-11-2021
Published: 24-01-2022

**ABSTRACT**

Today Personality Development is Vibrant topic amongst in Intellectuals worldwide. The basic ideas of Personality Development are quoted in the famous UlagaPothumarai 'Thirukural'. An individuals Thoughts, Mode of contact, Behaviour, Attitude to interact with others, basic principles, Intellectual. From the above components a person express his Uniqueness is called Personality. The main motto of this article to explore the Personality Development in 'Alwar Paasurangal'.

**Keywords:** Personality, Personality Development, Confidence, Motivation, Positive thinking, High Aim, Uniqueness, Perseverance

## முன்னுரை

திருமாலை முழுமுதற் தெய்வமாகக் கொண்ட சமயம் வைணவம். வைணவ சமய வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் அருளிய இன்சுவைப் பாசுரங்கள் 'நாலாயிர திவ்ய பிரபந்தம்' என்று போற்றப்படுகின்றது. பாரததேசமெங்கும் வைணவம் பரந்து விரிந்திருந்தாலும் அதன் வேர்கள் தென்னகத்தில்தான் வேரூன்றியுள்ளன. இன்றைய கல்வியுலகில் அதிகம் பேசப்பட்டுவரும் பொருண்மை 'ஆளுமை வளர்ச்சி' என்பதாகும். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, ஊக்கமுடைமை, நேர்மறை சிந்தனை, உயர்ந்த குறிக்கோள், தனித்துவம், ஆளுமைத்திறன் போன்றவை. இவற்றின் அடிப்படைச் சிந்தனைகளை நாம் திருக்குறளில் காண முடியும். குறிப்பாக, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, இடுக்கண்அழியாமை போன்ற அதிகாரங்களைக் குறிப்பிடலாம். மேலும், தற்கால புதுக்கவிதைகளில் காணக்கிடைக்கும் ஆளுமை வளர்ச்சி பற்றிய கவிதைகள் போன்றவற்றை ஆழ்வார் பாசுரங்களோடு ஒப்பு நோக்கலாம். மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் ஆழ்வார் பாசுரங்களில் காணக்கிடைக்கும் 'ஆளுமைச் சிந்தனைகளை' ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆளுமை - சொல்லாட்சி

ஆங்கிலத்தில் ஆளுமையைக் குறிக்கும் Personality என்ற சொல் இலத்தீன் மொழியல் உள்ள 'Personal' என்ற சொல்லிலருந்து பெறப்பட்டது. தமிழில் இது 'ஆளுமை' பெயர் பெறுகின்றது. 'ஆளுமை' என்ற சொல்லுக்கு பவனந்தம்பிள்ளை தமது அகராதியில் 'ஆட்சி' 'ஆளுமைத்தன்மை' என்று பொருள் உரைக்கின்றார். கிரியாவின் தமிழ்ப் பேரகராதி ஆளுமை என்ற சொல்லுக்கு 'ஒரு மனிதனின் தனிப்பட்ட குணத்தொகுப்பு' என்று குறிப்பிடுகின்றது. பேராசிரியர் அ. சிதம்பரநாதன் செட்டியர் தொகுத்த ஆங்கிலம்

- தமிழ்ச் சொற்களஞ்சியம் 'Personality' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு விரிவாகப் பொருள் உரைத்து 'தனிமனிதப் பண்பியல்களின் மொத்தத் தொகுதி' என்று சுட்டுகிறது. 'ஆள்வினையுடைமை' என்னும் குறள் அதிகாரத்துக்குப் பரிமேலழகர், 'இடைவிடாத மெய்முயற்சி உடையவன் ஆதல்' என்று விளக்கம் தருகின்றார். இன்று பரவலாக ஆட்சி பெறுகின்ற ஆளுமை என்ற சொல்லுக்குத் திரண்ட பொருளாக ஒரு பாத்திரத்தின் அல்லது 'ஒரு மனிதனின் இடைவிடாது கருமத்தை ஆண்டு நடத்தும் திறம்' என்ற பாவாணர் கருத்தை அமைத்துக் கொள்ளலாம்.

## ஆளுமை வளர்ச்சி

வாழ்வியற் களஞ்சியம் ஆளுமை பற்றிக் கூறும்போது "தனிமனிதனுடைய எண்ணங்கள், செயற்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள் அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்ததொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மை ஆளுமை எனப்படும்" (வாழ்வியற் களஞ்சியம்) என்று குறிப்பிடுகின்றது. வின்சுலோவின் ஆங்கில - தமிழ் அகராதி ஆளுமை பற்றி விவரிக்கும் போது "தனி மனிதனிடம் உள்ள வேறுப்பட்ட செயற்பண்பு நிலைகளில் ஒன்று" எனக் கூறுகின்றது.

சிறப்பாக மூன்று பரந்துபட்ட கோணங்களில் ஆளுமை வளர்ச்சி பேசப்படுகின்றது. அவை:

(1) பண்புநலன் (Charcter)

(2) நடத்தையியல் கூறுகள் (Behavioural Trains)

(3) மனப்பாங்கு (Attitude)

மேலும், தொடர்பியல் திறன்கள் (Communication Skills), மற்றவருடன் கொண்டிருக்கும் தனிப்பட்ட உறவுகள் (Interpersonal Relationship), வாழ்க்கை பற்றிய மனப்பாங்கு (Attitude toward life), விழுமியங்களைப் போற்றிப் பேண வேண்டும் என்பதில் காட்டும் முனைப்பு (Restorin our ethics) ஆகிய நிலைகளிலும் ஆளுமை வளர்ச்சிக்கல்வி இன்று அலசி ஆராயப்படுகின்றது. "சுவாமி விவேகானந்தர் ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையான சில முக்கியமான பண்புகளைக் கூறுகிறார்.

(1) தன்னிடத்தில் நம்பிக்கை

(2) ஆக்கப்பூர்வமான எண்ணங்களை எண்ணுதல்

(3) தோல்விகளையும் தவறுகளையும் நோக்கும்விதம்

(4) தன்னைச் சார்ந்திருத்தல்

(5) தியாகமும் சேவையும்

என்பதாகும்". (தமிழ் இலக்கியத்தில் உடன்பாட்டுச் சிந்தனைகள்)

## ஊக்கமுடைமை

ஓர் ஆளுமையாளர் வளர்த்துக்கொள்ள வேண்டிய தலைமைப்பண்பு எதற்கும் மனம் தளராக - சோர்வு அடையாத - ஊக்கம் நிறைந்த உள்ளம் ஆகும். ஏனெனில் சோர்வு இல்லாத ஊக்கம் உடையவன் இடத்தில் செல்வமானது தானாகவே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக்கொண்டு போய்ச்சேரும் என்கிறார் வள்ளுவப்பெருமான்.

'ஆக்கம் அதர்வினாய் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை' (Parimelalhagar, 2002)

மன உறுதியுடையவர் எடுத்த காரியத்தை எளிதில் திறம்பட முடித்துவிடுதல் திண்ணம். உள்ளம் உறுதியுடன் இருத்தல் வேண்டும் என்பதைத்தான் ஔவையும்,

'மனந் தடுமாறேல்'

என்று ஆத்திசூடி வாயிலாக அறிவுறுத்துகிறார். தடுமாற்றத்திற்கு இடங்கொடாமல் உள்ள உறுதியுடன் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் ஔவையார். 'தென்மொழி மறை' என்று போற்றப்படுகின்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாசுரங்களில் இத்தகைய ஆளுமைச் சிந்தனைகளை அடையாளம் காணலாம். ஒப்பற்ற உயர்ந்த பண்புநலன்களைக் கொண்டவன் எவனோ? மயக்கமற்ற மதிநலனைக் கொண்டவன் எவனோ? தேவர்களுக்கு அதிபதியானவன் எவனோ? அவனை மனதில் இருத்தி அவனது திருவடிகளைத் தொழுது வணங்குவோர்க்கு துயரங்களோ, சோர்வோ அருகில் வராது என்கிறார் நம்மாழர்வார். இதனை,

'உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயர்அறு சுடர்அடி தொழுதெழுதென் மனனே' (Thiurvengada Ramaanudhasan, 2010)

என்கிறார் நம்மாழ்வார்.

எண்ணம் உயர்வுடையதாக இருத்தல் வேண்டும். என்பதைத்தான்,

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து' (Parimelalhagar, 2002)

என்கிறார் வள்ளுவப் பெருமான். எனில் உயர்ந்தவற்றை மனதில் எண்ண வேண்டும். இதைத்தான் ஆழ்வார்கள், 'நின்றும் இருந்தும் கிடந்தும் திரிதந்தும் ஒன்றுமே ஆற்றான் என் நெஞ்சகலான்' என்கிறார் திருமங்கையாழ்வார். எல்லாம்வல்ல பரம்பொருளான எம்பெருமான் ஆழ்வாரது உள்ளத்தில் உறைகொண்டிருப்பதும் உள்ளத்தை விட்டு சிறிதும் அகலாதவனாக இருப்பதுமே தமது உள்ள வலிமைக்கு காரணமாகக் குறிப்பிடுகிறார். 'நெடியான் நிறங்கரியான் உளம்புகுந்து நீங்கான் அடியேனது உள்ளத்தகம்' என்கிறார் திருமங்கையாழ்வார்.

'மனமது செம்மையானால் மார்க்கமது செம்மையாகும்' என்கிறார் திருமூலர். 'ஊக்கமது கைவிடேல்' என்றார் ஔவையார். இதைத்தான் பாரதி, 'நினைவு நல்லது வேண்டும்' என்றான். எனில், ஒரு மனிதனுக்கு எது ஊக்கம் என்றால் உயர்ந்தவற்றை மனதில் எண்ணுவதே ஊக்கம் ஆகும். இதனை ஆழ்வார் பாசுரங்களில் நாம் அடையாளம் காண முடிகின்றது.'திண்ணிய நெஞ்சம் வேண்டும்' என்பானே பாரதி, அவ்வகையில் பொய்கையாழ்வார் திருமால் எங்குள்ளான்? திருவேங்கடத்திலா? திருபாற்கடலிலா? என்று வினாவினை எழுப்பி அதற்கான விடையாக தாமே கூறுகிறார். அவன் அடியேனது உள்ளத்தில் இருக்கிறான் என்கிறார். இதனை,

'உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமர் என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்
வெள்ளத்தில் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்?' (Thiurvengada Ramaanudhasan, 2010)

என்று பொய்கையாழ்வார் சுட்டுகிறார்.

'உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னுள் இட்டேன்
என்னப்பா இருடீகேசா என்னுயிர்க் காவலனே! (Thiurvengada Ramaanudhasan, 2010)

என்கிறார் அரங்கனை வளர்த்த ஆழ்வாரான பெரியாழ்வார்,

ஆறானது கடலை நோக்கியே பாய்ந்தோடும். தாமரை கதிரவனை நோக்கியே மலரும். உயிரும் காலனை நோக்கியே காத்திருக்கும். ஆனால் எமது உணர்வு மட்டும் திருமாலை நோக்கியே சிந்தித்திருக்கும்.

'பெயரும் கருங்கடலே நோக்குமாறு ஒண்பூ

உயரும் கதிரவனே நோக்கும் - உயிரும்

தருமனையேநோக்கும் ஒண் தாமரையாள் கேள்வன்

ஒருவனையே நோக்கும் உணர்வு' (Thiurvengada Ramaanudhasan, 2010)

என்கிறார் அதாவது நமது உள்ளத்தின் உணர்வே நமது உயர்வைக் குறிக்கும். அதனால்தான் 'எண்ணத்தை உயர்வு செய்' என்றான் பாரதி!

'எண்ணிய எண்ணியாங்கு எய்துபர் எண்ணியர்

திண்ணியர் ஆகப் பெறின்' (Parimelalhagar, 2002)

என்கிறார் வள்ளுவப் பெருமான்.

இதைத்தான், 'நயவேன் பிறர்பொருளை! நள்ளேன் கீழரோடு!

உயவேன் உயர்ந்தவரோடு அல்லால்' (Thiurvengada Ramaanudhasan, 2010)

என்கிறார் பொய்கையாழ்வார்.

## தன்னம்பிக்கை

மனிதனுக்கு வலக்கை இடக்கை தவிர மூன்றாவதாக இருக்க வேண்டிய கை, முதன்மையான கை எதுவெனில் 'தன்னம்பிக்கை' ஆகும். தன்னம்பிக்கை தனி மனிதனின் உரமாகும். மானுடப் பயிர் செழித்து வளர்வதற்கு தமது பாசுரங்களில் தன்னம்பிக்கைஉரத்தை ஆங்காங்கே இட்டுச் செல்கிறார்கள் ஆழ்வார்கள். மனிதன் முதலில் பிறரைச் சார்ந்திருத்தலைக் கைவிட வேண்டும். தன்னைச் சார்ந்திருத்தலே தன்னம்பிக்கையின் முதற்படியாகும். இதனை,

'வெறுங்கை என்பது மூடத்தனம்

விரல்கள் பத்தும் மூலதனம்'

என்பார் கவிஞர் தாராபாரதி.

'அவநம்பிக்கை கொள்ளாதே

அகத்தில் நம்பிக்கை கொள்' (Ravi, 2015)

என்பது ஒரு குறும்பா. ஆழ்வார்களின் பாசுரங்கள் தன்னம்பிக்கையின் ஊற்றாகவே மிளிர்கின்றன. திருமாலின் அருளானது இன்று கிட்டட்டும், அல்லது நாளை கிட்டட்டும், அல்லது சிறிது காலம் கழித்து கிட்டட்டும் காலம் கடந்தாலும் என்றாகிலும் திருமாலின் அருள் எனக்குண்டு என்பதை அசைக்க முடியாத தன்னம்பிக்கையோடு கூறுகிறார் திருமழிசையாழ்வார்.

'இன்றாக நாளையே ஆக இனிச்சிறிது

நின்றாக நின் அருள் என் பாலதே -நன்றாக

நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் நாரணனே

நீ என்னை அன்றி இல்லை' (Thiurvengada Ramaanudhasan, 2010)

என்னவொரு ஆழமான ஆணித்தரமான அசைக்கமுடியாத தன்னம்பிக்கை வரிகள். இறைவன்அருள் கிட்டாது என்று கூறுவாரின் தடைகளைத் தகர்த்தெறிகின்ற தன்னம்பிக்கை வரிகள் அல்லவா இவை.!

'மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது

தடைகளற்ற வாழ்க்கை அல்ல

தடைகளைத் தகர்த்தெறியும் வாழ்க்கையே'

அதனால்தான் பாரதி சுதந்திரம் அடைவதற்கு முன்பே சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்றான்.

'ஆடுவோமே பள்ளு பாடுவோமே

ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் - என்று' (Meyyappan, 2000)

தீர்க்கமான நம்பிக்கையே நமக்கு ஒரு தீர்வினைத் தருகின்றது. அவ்வகையில் ஆழ்வார்களின் பாசுரங்களில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள் மிகுதியாகப் பாய்ந்தோடுவதை அறியமுடிகின்றது. மனிதனின் பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை மகாதேவன் கையில் உள்ளது என்பர் பெரியோர். அதனால்தான் திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவனிடம் வேண்டினார். 'மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்றார். தொண்டரடிப்பொடியாழ்வார் 'ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே' என்றார். ஆனால் இவ்விடம் குலசேகராழ்வார், திருவேங்கடமலையில் நான் ஒரு குருகாய் பிறப்பேன் என்கிறார். இறைவனிடம் கொண்ட ஆழ்ந்த பக்தியணர்வு குலசேகராழ்வாருக்கு அசைக்க முடியாத தன்னம்பிக்கையை அளிக்கின்றது.

'கூனேறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்து

கோனேரி வாழும் குருகாய் பிறப்பேனே' (Thiurvengada Ramaanudhasan, 2010)

பொதுவாக, இறந்தவர்களைக் குறிப்பிடும்போது வைகுந்தப்பதவி அடைந்தார். சிவலோகப்பதவி அடைந்தார் என்பர். வைகுந்தம் எவ்வாறிருக்கும் என கேள்விப்பட்டிக்கிறோம். ஆனால் சென்றவர் யாரும் வந்து சொன்னதில்லை. இவ்வுலகில் வாழ்பவர் யாரும் வைகுந்தம் செல்கிறேன் என்று சொன்னதில்லை. ஆனால் குலசேகராழ்வார் கூறுகிறார். பிரம்மன், இந்திரன், சிவன் இவர்களில் யாராலும் புகமுடியாத வைகுந்தத்திற்கு நான் புகுவேன். எப்படியெனில், வைகுந்த காவலர்கள் என்னைத் தடுத்தார்களேயானால் பெருமாளின் பொன் வட்டிலில் பிடிக்கின்ற வேலையாள் எனக்கூறி உட்புகுந்து விடுவேன் என்கிறார். அதாவது பெருமாள் தாம்பூலம் தரிக்கின்றபோது உமிழ்கின்ற உமிழ்நீரை வட்டில் பிடிக்கின்ற வேலையாளாக நான் அவ்விடம் செல்வேன் என்கிறார். ஏன்? பொன் வட்டில் பிடிக்கின்ற வேலையாள் என ஆழ்வாரிடம் கேட்டால் அப்பணி செய்கின்றபோதுதான் பெருமானின் திருமுகத்தைக் அடிக்கடி காணலாம் என்கிற அவாவில் பொன் வட்டில் பிடிக்கின்ற வேலையாள் பணியைப் பிடித்த பணியாகச் செய்வதாக ஆழ்வார் இங்ஙனம் பாடுகிறார்.

'பின்னிட்ட சடையானும் பிரம்மனும் இந்திரனும்

துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்

மின் வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தான்உமிழும்

பொன்வட்டில் பிடித்து உடனே புகப்பெறுவேன் ஆவேனே' (Thiurvengada Ramaanudhasan, 2010)

இப்பாசுரத்தில் தாம் எடுத்துக்கொண்ட காரியத்தில் குலசேகராழ்வாரின் உறுதிப்பாட்டினையும் தளராத தன்னம்பிக்கையினையும் உய்த்துணர முடிகின்றது. இதே போல், ஆண்டாளும் திருப்பாவை பாசுரத்தில் சுட்டியிருப்பதைக் காணலாம். எந்த இறைவனுக்காக பாவை நோன்பு நோற்கின்றோமோ அந்த இறைவன் நமக்கு அருள் செய்வான் என்பதில், துளியும் ஐயப்பாடு இல்லாமல்

'நாராயணனே நமக்கே பறை தருவான்

பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்' (Thiurvengada Ramaanudhasan, 2010)

இப்பாசுரவரிகளில் சற்று கூர்ந்து நோக்கினால் ஆண்டாளின் தன்னம்பிக்கைத்திறன் நமக்கு நன்கு புலப்படும். நாராயணனே என்பதிலும், நமக்கே என்பதிலும் 'ஏ' காரம் சேர்த்துப் பாடுவதிலேயே

நாராயணன் அருள் தமக்கு கிட்டும் என்பதை அழுத்தமாகவும் அதே சமயம் ஆழமாகவும் பதிவு செய்கிறார்.

## விடாமுயற்சி

ஒருவன் தன் எண்ணத்தை முயற்சியாக்கி முயற்சியை அயராத உழைப்பினால்செயலாக்கிக் காட்ட வேண்டும் தவிர வாய்ப்பேச்சால் நாட்களை நகர்த்திக் கொண்டிருத்தல் நன்மை தராது. ஆதைச் செயலில் காட்டுவதே ஒருவனது ஆளுமைப் பண்பாகும். இக்கருத்தை,

'உடையது விளம்பேல்'

என்கிறார் ஔவையார். தாம் எடுத்துக்கொண்ட எக்காரியத்திலும் விடாது முயற்சியை உடையவனே வெற்றியாளன் ஆகிறான். 'முயற்சி தம் மெய் வருத்தக் கூலி தரும்' என்பது வள்ளுவப் பெருமானின் வாக்கு.

'முயற்சி என்பது முடிந்தவரை செய்வதல்ல

மூச்சிருக்கும் வரை செய்வதே முயற்சி'

ஒருவனது முயற்சியே பயிற்சியாகிறது. பயிற்சியே தொடர்ச்சியாகிறது. தொடர்ச்சியே பதோல்வியை விரட்டியடித்து வெற்றியைப் பெற்றுத்தருகின்றது. ஒரு புதுக்கவிதை,

'பத்தாவது முறை பூமியில் விழுந்தவனைப் பார்த்து

பூமித்தாய் சொன்னாள் ஒன்பது முறை விழுந்து

எழுந்தவனல்லவா நீ என்று'

விடாது முயற்சியோடு உழைப்பவன் ஊழையும் புறம் தள்ளுவான். இதைத்தான்,

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி

தாழாது உஞற்று பவர்' (Parimelalhagar, 2002)

என்கிறார் வள்ளுவர். ஆழ்வார்களும் இறையருளினைப் பெறுவதற்கு விடாமுயற்சியினைக் கொண்டிருந்தனர். ஒரு கணவன் தம் மனைவியை அனைவரது முன்னர் அவமானப்படுத்தினாலும் இகழ்ந்துரைத்தாலும் அம்மனைவியானவள் கணவனை விட்டு விலகமாட்டாள். இதுவே நல்ல குலமகளுக்கு இலக்கணமாம். அதுபோல என்னைப் புறம் தள்ளினாலும் திருமாலே உன் திருவடியை விட்டு விலகமாட்டேன் உன் திருவடியைப் பெறுவேன் என்கிறார் குலசேகராழ்வார்.

'கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்

கொண்டானை அல்லால் அறியாக் குலமகள் போல்

விண்தோய் மதில் புடைசூழ் வித்துவக்கோட்டு அம்மானே

கொண்டாளே ஆகிலும் உன் குரை கழலே கூறுவேனே' (Thiurvengada Ramaanudhasan, 2010)

திருமாலின் அருளினைப் பெறுவதற்கு எத்துயரம் வந்தாலும் அதனை ஒரு பொருட்டாக் கருதாது விடாமல் இறையருளைப் பெறுவதற்கு விழைகின்ற குலசேகராழ்வார் முயற்சியினை இப்பாசுரத்தில் அறியமுடிகின்றது.

'மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட்டு அம்மானே

ஆளா உனதருளே பார்ப்பேன் அடியேனே' (Thiurvengada Ramaanudhasan, 2010)

ஒரு மனிதனுக்கு முயற்சி மட்டும் போதாது அம்முயற்சி பயிற்சியாக மாறவேண்டும். அப்பயிற்சியும் தொடர்ச்சியாக இருத்தல் வேண்டும். அதுவே தோல்வியை விரட்டி வெற்றிபெறக்

கிட்டும். திருமாலை அமைடய வேண்டும் என்பதற்காகத்தான் ஆண்டாளும் 'பாவை நோன்பு' இருப்பதற்காக இளம்பெண்களை விடா முயற்சியோடு அழைக்கின்றாள்.

'மூட நெய்பெய்து முழங்கை வழிவார

கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்' (Thiurvengada Ramaanudhasan, 2010)

என்கிறார் ஆண்டாள். இறைவனை அடையவேண்டும் என்ற விடா முயற்சியோடு நோன்பு நோற்ற ஆண்டாள் இறுதியில் அரங்கனையே அடைந்தாள்.

விடாமுயற்சியின் பயனை எடுத்துரைக்கும் பொருட்டுத்தான் ஊழின் வலிமையைப் பற்றிக் கூறிய வள்ளுவப் பெருமானே கடின உழைப்பிற்காக இறைவனே ஓடி வந்து உதவுவான் என்கிறார். 'முயற்சி தம் மெய் வருத்தக் கூலி தரும்'.

## துன்பத்திற்குத் துன்பம் தருதல்

தாம் எடுத்துக்கொண்ட செயலை தன்னம்பிக்கையுடனும் விடா முயற்சியுடனும் வெற்றியுறச் செய்து முடிக்கவல்ல ஓர் ஆளுமையாளர் வாழ்வில் துன்பம் வரும்போது அதற்காக வருந்தித் துன்பப்படமாட்டார். அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதனை வென்று விடுவார் என்கிறார் வள்ளுவப்பெருமான்.

'இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு

இடும்பை படாஅ தவர்' (Parimelalhagar, 2002)

இதனைத்தான் தொண்டரடிப்பொடியாழ்வார்,

'காவலில் புலனை வைத்துக் கலிதனைக் கடக்கப் பாய்ந்து

நாவலிட்டு உழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே

மூவுலகு உண்டு உமிழ்ந்த முதல்வ நின் நாமம் கற்ற

ஆவலிப்பு உடைமை கண்டாய் அரங்கமா நகருளானே' (Thiurvengada Ramaanudhasan, 2010)

என்கிறார். அதாவது, மனிதர்களை பாவத்தில் மூழ்கச்செய்கின்ற ஐம்புலன்களையும் அடக்கி ஆள்கின்ற தன்மையுடையோம். ஆனால், எங்களின் உயிரைப் பறித்துச்செல்ல வருகின்ற எமதர்மனின் தூதர்களின் தலைமேல் நின்று ஆடவும் செய்வோம். ஏனெனில் திருமாலின் நாமத்தை எங்களது நாவில் உச்சரித்துக்கொண்டிருப்பதால் எங்களை எந்தவொரு தீங்கும் நெருங்காது. அப்படி நெருங்கும் தீங்கும் தீமையே காணும் என்கிறார்.

'நெய்க்குடத்தைப் பற்றி ஏறும்

எறும்புகள்போல் நிரந்து எங்கும்

கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்!

காலம்பெற உய்யப் போமின் (Thiurvengada Ramaanudhasan, 2010)

தமது உடம்பில் குடிகொண்டுள்ள நோய்களைப் பார்த்துப் பெரியாழ்வார், நெய்க்குடத்தைப் பற்றி ஏறும் எறும்புகள்போல் எனது உடம்பில் இருக்கும் நோய்களே, விரைவில் இவ்விடம் விட்டு போய்விடுங்கள். ஏனெனில் எம்பெருமான் திருமால் இவ்விடத்தில் குடி கொண்டு பள்ளி கொள்ளப்போகின்றான் என்று தமக்கு வந்திருக்கும் நோயை விரட்டுகிறார். நோய்க்கே நோயைத் தருகின்ற ஆற்றல் பெற்றவை ஆழ்வாரின் பாசுரங்கள்.

## ஆளுமைத் திறன்

தம்முடைய தனிப்பண்புகளால் ஒருவரை ஆட்படுத்தும் தன்மை ஆளுமைத்திறனில் முதன்மையாகும். அதாவது, தம்முடைய தனித்துவத்தால் அன்பால், அறிவால், அனுபவத்தால், ஞானத்தால், பக்தியால் ஏதோ ஒரு பண்பு நலனால் ஆட்படுத்தும் தன்மையாகும். இங்கு ஆழ்வார் தம்முடைய பக்தியால் இறைவனையே ஆட்படுத்துகிறார். திருவெஃகா என்ற திருத்தலத்தில் இருந்த திருமழிசையாழ்வார் தனது சீடன் நாடு கடத்தப்பட்டான் என்பதனை அறிந்து தானும் அவ்விடம் விட்டு அகல்கிறார். தாம் அன்றாடம் வழிபடும் பெருமாளையும் தம்மோடு சேர்த்து அழைக்கின்றார். பெருமாளும் ஆழ்வாரின் வாக்குக்குக் கட்டுப்பட்டு பாம்பணையில் பள்ளி கொண்ட பெருமாள் தமது பாம்பணையைச் சுருட்டிக் கொண்டு சென்றாராம். இதனை திருமழிசையாழ்வாரின் தனிப்பாடல் நமக்கு உணர்த்துகின்றது.

'கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும் உன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்' (Thiurvengada Ramaanudhasan, 2010)

தமது போக்கினை கைவிட்ட ஆழ்வார், இறைவனது போக்கையும் கைவிடக் கூறுகிறார். உடனே இறைவனும் ஆழ்வாரின் வேண்டுகோளை ஏற்று தமது பைந்நாகப்பாயை விரித்துக்கொண்டானாம்.

'கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டும் - துணிவுடைய
செந்நாப்புலவனும் போக்கொழிந்தான் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் படுத்துக் கொள்' (Thiurvengada Ramaanudhasan, 2010)

இப்பாடலடியில் திருமழிசையாழ்வார் தம்மை அடியேன் என்றோ பக்தன் என்றோ சேதனன் என்றோ தொண்டன் என்றோ கூறவில்லை. தம்மைப் புலவன் என்கிறான் அதுவும் தமிழ்ப்புலவன் 'செந்நாப்புலவன்' என்கிறார். தமிழ்ப்புலவன் என்று கூறுவதில் ஒரு பெருமிதம் ஆழ்வாரிடம் தென்படுகின்றது. இதைத்தான் பாரதி 'ஞானச் செறுக்கு' என்பான். தமிழ் மேல் ஆழ்வார்கள் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினைப் பாசுரங்களின் வாயிலாக உய்த்துணர முடிகின்றது.

இறைவனிடம் வேண்டும்போது கூட இறைவன் எங்ஙனம் வந்து நமக்கு அருள் பாலிக்க வேண்டும் என்பதை ஆண்டாள் தமது திருப்பாவை பாசுரத்தில் எடுத்துரைக்கிறாள்.

'மாரி மழை முழைஞ்சில் மன்னிக் கிடத்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்று தீவிழித்து மூரி நிமிர்ந்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
முழங்கிப் புறப்பட்டுப் போதருமாபோலே பூவைப்பூவண்ணா
நின் கோயிலின் வாசல் கோப்புடைய சீரிய சிங்காசனத்திலிருநது
யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்' (Thiurvengada Ramaanudhasan, 2010)

மழைக்காலத்தில் குகையில் படுத்துறங்கும் சிங்கமானது விழிப்பு வந்தவுடன் எங்ஙனம் தமது பிடரி மயிரை சிலிர்த்துக்கொண்டு எழுந்து கண்களில் நெருப்புப்பொறிகள் உமிழ காட்டு விலங்குகளை நடுங்கச்செய்யும்படியான கர்ஜனை செய்து கொண்டு அதாவது முழங்கிக்கொண்டு வருகிறதோ அது போல, சீரிய சிங்கம் போன்று கம்பீரமாக நடை பயின்று வந்து சிம்மாசனத்தின் மீதமர்ந்து எமக்கு அருள் பாலிக்க வேண்டும். இறைவன் தமக்கு அருள்பாலிக்கும் தன்மையையும் எத்தகைய முறையில்

இறைவன் தம்மை அணுகி ஆராய வேண்டும் என்பதையும் மிகச் சிலிர்ப்புடன் சிலாகிக்கிறார் ஆண்டாள்.

தமது கற்பனைக்கேற்ப இறைவன் காட்சி அளிக்க வேண்டும் என்ற ஆண்டாளின் கருத்தாடல் ஆளுமைப் பண்புக்கு பதச்சோறாகும்.

## தமிழ் - தனித்துவம்

ஆளுமையாளர்கள் எப்பொழுதும் தனித்துவம் வாய்ந்தவர்களாக திகழ்வார்கள். அவர்களின் தனித்துவமே அவர்களின் ஆளுமைப் பண்பை அடையாளப்படுத்தும். அவ்வகையில், பாரத தேசமெங்கும் திருமால் நெறியை பரப்பச்செய்த ஆழ்வார்கள் தமிழையும் தமிழ் நெறியையும் வளர்க்கத் தவறவில்லை. தமிழ் மேல் கொண்டிருந்த தாளாத பற்றினை ஆழ்வார்களின் இன்தமிழ்ப் பாசுரங்களில் ஆய்ந்தறிய முடிகின்றது.

'ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணர்க்கு

ஞானத் தமிழ் புரிந்த நான்' என்கிறார் பூதத்தாழ்வார்.

'என் நெஞ்சத்துள்ளிருந்து இங்கு இருந்தமிழ்நூல்

இவை மொழிந்து' என்கிறார் நம்மாழ்வார்.

'இருந்தமிழ் நன் மாலை இணையடிக்கே சொன்னேன்

பெருந்தமிழன் நல்லேன் பெரிது' என்கிறார் பூதத்தாழ்வார்.

'இருந்தமிழ்ப்புலவன் செஞ்சொல்மாலை என்கிறார் திருமங்கையாழ்வார்.

'பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத்தமிழ்மாலை'

என தமது அருளிச்செயலுக்கு பெயர் சூட்டுகிறார் ஆண்டாள்.

'செந்நாப் புலவன் போக்கொழிந்தேன்' என்கிறார் திருமழிசையாழ்வார்.

தமிழையும் இறைவனையும் பிரித்தறியா ஆழ்வார்கள் இறைவனைத் தமிழாகவே கண்டனர். அதனால்தான் திருமாலைக் கண்ட போது 'கவிக்கு நிறை பொருளைக் கண்டேன்' எனப் பாடுகிறார் ஆழ்வார்.

## முடிவுரை

ஆழ்வார்கள் பாசுரங்களில் திருமாலின் பக்தி நெறி மட்டுமன்றி ஆளுமை வளர்ச்சியின் அடிப்படைச் சிந்தனைகள் ஆங்காங்கே விரவிக் கிடப்பதை உற்றுநோக்க முடிகின்றது. பக்தி இலக்கியங்கள் பக்தி நெறி, வாழ்வியல் நெறி, இறைக்கோட்பாடு, இறைத்தத்துவங்கள் என்பதோடு மட்டுமன்றி தன்னம்பிக்கைச் சிந்தனைகளின் ஊற்றுகளாகவும் அவை உள்ளன என்பதை ஆழ்வார் பாசுரங்களில் ஊடுருவிக் காண முடிகின்றது. வாழ்விற்குத் தேவையான விழுமியங்கள் ஆழ்வார்கள் பாசுரங்களில் விரவிக் கிடக்கின்றன. ஒரு ஆளுமையாளனுக்குத் தேவையான உள்ளம் உடைமை, ஊக்கமுடைமை, விடா முயற்சி, தன்னம்பிக்கை, துன்பத்தைக் கண்டு கலங்காத்தன்மை, தனித்துவம், தலைமைப்பண்பு, சேவை மனப்பான்மை, ஆட்கொள்ளும் தன்மை போன்ற அடிப்படைக் கூறுகள் ஆழ்வார்கள் பாசுரங்களில் இழையோடிச் செல்வதை உய்த்துணர முடிகின்றது.

## References

Meyyappan, S., (2000) Bharathiyar Kavithaigal, Thentral Pathippagam. Chitampparam, India.

Meyyappan, S., (2000) Neethi Nool Thelivurai, Manivasagar Pathippagam. Chennai, India.

Mohan.R., (2013) Kavithaisudar, Vanathi Pathippagam. Chennai, India.

Nirmalamohan, (2018) Tamil illakiyathil uadanpattu Sindhanigail, Vanathi Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Ravi, R., (2015) Haihoo Muthartray Ulagu, Vanathi Pathippagam, Chennai, India.

Thiurvengada Ramaanudhasan, T., (2010) Naalayira Divya Prabhantham, Uma Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License